# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 13 ஹிஜ்ரி 1431 துல்ஹஜ் நவம்பர் 2010

இலவசம்

# ஹஜ் பெருநாள் நல்வாழ்த்துகள்



# சிங்கப்பூர் வளர்ச்சிக்கு மலாய் முஸ்லிம் சமூகத்தின் பங்களிப்பு

### அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் விளக்கம்

சிங்கப்பூரிலும் தென் கிழக்காசிய நாடுகளிலும் முஸ்லிம் சமூகத்தினர் ஆதிகுடியேறிகள் ஆவர். அரபு மற்றும் இந்திய வணிகர்களிடமிருந்து இவ்வட்டார மக்கள் இஸ்லாத்தைத் தழுவினர். வணிகம், குடியேற்றம் ஆகியவற்றின் மூலம் சீன மக்களுடன் இவர்களுக்கு நீண்ட காலப் பிணைப்பும் தொடர்பும் உருவாயிற்று. காலனித்துவ ஆட்சி, ஜப்பானியர் ஆக்கிரமிப்பு முதலான அனுபவங்களைக் கடந்து பல இன, பல சமய சுதந்திர சிங்கப்பூரின் முக்கிய அங்கமாக முஸ்லிம் சமூகம் திகழ்ந்து வருகிறது.

மக்கள் செயல் கட்சி 1954ல் அமைக்கப்பட்டபோது அதனை உருவாக்கிய உறுப்பினர் அணியில் மலாய் முஸ்லிம்கள் பலர் இருந்தனர். 1959ல் சிங்கப்பூர் தன்னாட்சி பெற்றபோது மக்கள் செயல் கட்சியின் வேட்பாளர்களாக பல முஸ்லிம்கள் போட்டி இட்டனர்.

மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் 1965ல் பிரிந்தபோது முஸ்லிம் சமூகம் அதிர்ச்சி அடைந்த போதிலும், அதனால் சோர்ந்து விடாமல் சக சிங்கப்பூரர்களைப் போன்றே இவர்களும் வளர்ச்சியடைவதை அரசாங்கம் உறுதிப்படுத்தியது.

மக்கள் செயல் கட்சி அரசாங்கம் ஆங்கிலத்தை வழக்க மொழியாகவும் வர்த்தக மொழியாகவும் நிலைநாட்டிய அதே வேளையில் மலாய், மாண்டரின், தமிழ் ஆகியவற்றையும் அங்கீகரித்து பல இனக் கொள்கையை மேம்படுத்தி ஐக்கியத்திற்கும் திறன் வளர்ச்சிக்கும் வழி வகுத்தது. கல்வி, சமூக நலச் சேவைகளை வழங்குவதற்கு தொண்டூழிய அமைப்புகள் உருவெடுத்தன.

மலாய் முஸ்லிம் சமூகப் பெண்கள் வேலைக்குச் சென்று பொருளியல் பங்களிப்பிற்கு ஆதரவாக அமைந்தனர். அதே சமயம் ஆயிரக் கணக்கான முஸ்லிம்கள் கம்பத்து வீடுகளிலிருந்து வீடமைப்பு வளர்ச்சிக் கழக வீடுகளில் குடியேறி மறுமேம்பாட்டுக்கு வழிவகுத்தனர்.



சுய உதவி அமைப்பான மெண்டாக்கி 1982ல் அமைக்கப்பட்டு கல்வியே முன்னேற்றத்துக்கு வழி எனும் கொள்கை நிலைநாட்டப்பட்டது. எனினும், அதற்கு முன்னரே 1960களிலும் 1970களிலும் பல மலாய் முஸ்லிம் அமைப்புகள் வசதி குறைந்தவர்களுக்காகத் துணைப்பாட வகுப்புகளை நடத்தி வந்தன.

1980களிலிருந்து அதிகமான மலாய் முஸ்லிம் மாணவர்கள் பள்ளிகளில் சிறப்பான தேர்ச்சியடையத் தொடங்கினர். பெற்றோரும் பிள்ளைகளின் கல்விக்கு அதிகத் தொகை ஒதுக்கத் தொடங்கினர்.

அதே சமயம் நடுத்தர வர்க்கத்தினர் பெருகி, பல்வேறு வேலைகளிலும் பங்கேற்றதால் பரவலான பிரதிநிதித்துவம் ஏற்பட்டது. 1950-60களில் பணிபுரிந்த ஆசிரியர்கள், எழுத்தர்கள், தொழில்நுட்பர்களின் பிள்ளைகள் காலத்தின் வளர்ச்சிக்கேற்ப மருத்துவர்களாக, பொறியாளர்களாக, வங்கியாளர்கள், வழக்கறிஞர்கள், அறிவியலாளர்கள் என பல துறை வல்லுநர்களாக வளர்ச்சிபெற்றுள்ளனர். அறப்பணிகளிலும் ஈடுபட்டு நாட்டு நலனுக்குப் பங்காற்றி வருகின்றனர்.

எவ்விதத்திலும் பின்னடைந்து விடக்கூடாது என்ற உறுதியுடன் சமூக முனைப்பாற்றலுடன் மலாய் முஸ்லிம் சமூகம் செயல்பட்டு வருகிறது. மரபுடமையில் பெருமை கொண்டு, நாட்டு முன்னேற்றத்தில் முழுஅளவில் பங்கேற்கும் மனப்பாங்கு மேலோங்கியிருக்கிறது. நாட்டின் வெற்றிக்கு பல இன, சமய, சமூக நல்லிணக்கத்தையும் ஐக்கியத்தையும் மேம்படுத்த வேண்டும், அயராது உழைக்க வேண்டும் என்பதை மலாய் முஸ்லிம் சமூகம் உணர்ந்து செயல் பட்டுவருகிறது.

ஒருவரின் சமூக அந்தஸ்தும் பொருளாதார நிலையும் எவ்வாறு இருந்தாலும் கொத்தோங் ராயோங் எனும் ஒத்துழைப்பு உணர்வு வாசகத்தை உள்ளத்தில் இறுத்திக் கொண்டு, வலுவாக ஒத்துழைப்பது அவசியம். அதுவே சமூகத்தின் ஆன்மாவில் முக்கிய அங்கம் வகிப்பதாகும். இதுவே நாட்டுக்கு மலாய் முஸ்லிம் சமூகத்தினர் ஆற்றும் அரும் பங்களிப்பாகும்.

*(அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் எழுதிய ஆங்கிலக் கட்டுரையின் சுருக்கம்.)*

# கல்வி வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிப்போம்! குடும்ப நற்பண்புகளைப் போற்றுவோம்!

சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். ஒளிமயமான, மேம்பட்ட எதிர்காலத்திற்கு நம்மை இட்டுச் செல்லும் பாதையை கல்வித் திறனே அமைத்துத் தருகிறது. எனவே, கல்வி முன்னேற்றத்தின் மூலமே நமது சமூகமும் நாடும் தொடர்ந்து வளம் பெறும்.

சுற்றுப்புற, நீர்வள, முஸ்லிம் விவகார அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் நோன்புப் பெருநாள் செய்தியில் இந்தக் கருத்துகளை வழங்கியுள்ளார். சிங்கப்பூரின் பொருளியல் சீரடைந்து வரும் தருணத்தில் இவ்வாண்டின் நோன்புப் பெருநாளை நாம் கொண்டாடுவது மகிழ்ச்சியும் மனநிறைவும் தருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நம் பிள்ளைகளே நமது எதிர்காலம். அவர்களே நாளைய தலைவர்கள். அறிவாற்றலை அவர்கள் வளர்த்துக் கொண்டு, மீள்திறனுடன், முற்போக்குச் சிந்தனையுடன் திகழ்வதற்கு நாம் ஊக்குவிக்க வேண்டும். பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்கு தொடர்ந்து அதிக முக்கியத்துவம் அளிப்பது நமது கடமை.

நமது சமூக முன்னேற்றத்திற்கு ஊழியர்களின் திறன் மேம்பாடு அவசியம் என்றும் அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் வலியுறுத்தினார். சிறப்பாகப் பணிபுரிவதற்கு மறுபயிற்சித் திட்டங்களில் அவர்கள் பங்கேற்க வேண்டும். அதற்கும், வேலை வாய்ப்புகளுக்கும் ஆதரவாக சமூகத் தலைவர்கள் மன்றமும் தேசிய அமைப்புகளும் இணைந்து செயல்படுகின்றன. இளையர்களுக்கு அதிகமான வாய்ப்புகளை உருவாக்கித் தருவதற்கும், நமது குடும்பங்களைப் பலப்படுத்துவதற்கும் ஆக்ககரமான முயற்சிகள் தொடரும் என்றும் அவர் உறுதி தெரிவித்தார்.

நாம் இந்த நோன்புப் பெருநாள் கொண்டாட்டத்தில், நமது குடும்பத்தினர், நண்பர்கள், சக சிங்கப்பூரர்கள் ஆகியோருடன் திளைக்கும் அதே தருணத்தில், புனித ரமலானின் பொன்னான பண்புகளையும் தொடர்ந்து போற்றி மதிக்க வேண்டும் என்று அமைச்சர் எடுத்துரைத்தார். ரமலான் நோன்பு மாதமும் இளையர் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியும் ஏக காலத்தில் இவ்வாண்டு நிகழ்ந்ததை நம்மால் மறக்க இயலாது என்றும் அவர் கூறினார்.

இந்தப் புனித நோன்புப் பெருநாளில், சிங்கப்பூரர்களும், முஸ்லிம்களும் தங்கள் குடும்பப் பண்புகளிலும், திறன்களிலும் பெருமை கொள்ள வேண்டும். நமது குடும்பங்களின் நீண்ட கால நலன், நமது பிள்ளைகளின் கல்வி மேம்பாடு, நமது முதுமைக் காலத் தேவைகள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு மிதவாதப் போக்கை நாம் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்று அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் குறிப்பிட்டார்.

# புண்ணியமிகு புனித ஹஜ்

"அல்லாஹ்வுக்காக கஅபா எனும் இவ்வாலயத்தை தரிசித்து ஹஜ் செய்வது சக்தி பெற்றிருக்கும் ஒவ்வொருவர் மீதும் கடமையாக்கப்பட்டிருக்கிறது" என்று திருக்குர்ஆன் எடுத்துரைக்கிறது.

புனித கஅபாவின் பக்கம் ஹஜ் செய்வதற்காக வருபவர்கள் இம்மை, மறுமை பயன்களை அடைந்து கொள்வார்கள் என்றும் அது கூறுகிறது.

சக்தியுள்ளவர்கள் கட்டாயம் நிறைவேற்ற வேண்டிய கடமை ஹஜ் என்பதை அறுதியிட்டுச் சொல்கிறது திருமறை. அது கிடைத்தற்கரிய பேறு. இறைவன் நாடியவர்களுக்கு அந்த நற்பேறு கிடைக்கிறது.

மக்கா, மினா, அரஃபாத், முஸ்தலிபா ஆகிய தலங்களில் ஹஜ் சடங்குகளை, கடமைகளை நிறைவேற்றி 'ஹாஜி' ஆகிவிடலாம்.

ஹிஜ்ரி பத்தாம் ஆண்டில் அண்ணல் நபிகளார்(ஸல்) புனித ஹஜ் கடமையை நிறைவேற்றிய போது அரஃபாத் பெருவெளியின் அருள்மலையிருந்து உரையாற்றினார்கள்.

"இன்று உங்களுக்காக உங்களது மார்க்கத்தை (இஸ்லாம்) சம்பூரணமாக்கினேன். என் அருட்கொடைகளை நிறைவு செய்தேன். இஸ்லாத்தை உங்களுக்குரிய மார்க்கமாக அங்கீகரித்துக் கொண்டேன்"(5:3) என்ற திருக்குர்ஆன் வசனம் பெருமானார்(ஸல்) அவர்கள் அங்கு தங்கியிருந்த அந்த சமயத்தில்தான் இறைவனால் அருளப் பெற்றது.

ஒரு லட்சத்து 24 ஆயிரம் பேர் திரண்டிருந்த கூட்டத்தில் நபிமணி(ஸல்) ஆற்றிய புனித ஹஜ் உரை வரலாற்றுச் சிறப்புடையது. உலக மக்களுக்கு நிரந்தரமான, அரிய படிப்பினையாக விளங்கிக் கொண்டிருக்கும் அந்த உரையை ஹாஜிகள் மட்டுமின்றி அனைவரும் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

"அநீதி செய்வதிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். உங்களிடம் ஒரு



மகத்தான பொருளை விட்டுச்செல்கிறேன். அதுவே புனித திருக்குர்ஆன். இதனை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்வீர்களானால் நீங்கள் ஒருபோதும் வழிதவறமாட்டீர்கள். என் சொல்லை நன்கு கவனியுங்கள்.

இங்கு வந்திருப்போர்கள் வராதிருப் போர்களுக்குத் தெரிவியுங்கள். சில சமயம் நேரில் செவியேற்பவரைவிட சொல்லப்படுவோர் மனதில் நன்கு பதியக்கூடும்.

"மக்களே! எனக்குப் பின்னர் எந்த நபியும் வருவதற்கில்லை. உங்களுக்குப் பின் எந்த ஒரு புதிய சமுதாயமும் தோன்றாது. அறிந்து கொள்ளுங்கள். உங்கள் இரட்சகனுக்குக் கீழ்ப்படியுங்கள்."

"ஐங்காலத் தொழுகையைப் பேணுங்கள். நோன்பைப் பூரணமாக நிறைவேற்றுங்கள். உங்களின் பொருள்களுக்குரிய ஜக்காத்தை-ஏழை வரியை-ஒழுங்குடன் அளித்திடுங்கள். ஹஜ்ஜை யும் நிறைவேற்றுங்கள்... சுவர்க்கம் உங்களுக்கே உரியது" அண்ணலார்(ஸல்) அவர்கள் முஸ்தலிபாவில் தங்கியிருந்த சமயம், இறைவனிடம் இறைஞ்சி தம்மைப் பின்பற்றுவோர் பாவங்கள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.

ஹஜ்ஜின்போது நடைபெறும் ஒவ்வோரு நிகழ்ச்சியும் இறைவனின் ஆணைக்கு முற்றிலும் அடிபணிவதுதான் என்பதே.

லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்

லப்பைக் லாஷரீக்க லக்க லப்பைக்

இன்னல் ஹம்த

வன்னிஃமத்த

லக்க வல் முல்க்

லாஷரீக்க லக்

இந்த தல்பியா - உறுதிமொழி இல்லாமல் ஹஜ் இல்லை.

நான் வந்துவிட்டேன்

இறைவா உன்னிடம் வந்துவிட்டேன்

நான் வந்துவிட்டேன்

உனக்கு இணை துணையாருமில்லை.

நான் உன்னிடம் வந்துவிட்டேன்

நிச்சயமாக எல்லாப் புகழும் உனக்கே

அருங்கொடையாளன் நீயே, எல்லா ஆட்சியும்

உனக்கே சொந்தம்

உனக்கு இணைதுணை யாருமில்லை.

இந்த அனுபவம் அரியது. மீண்டும் மீண்டும் அந்தப் பேறும் அனுபவமும் கிடைக்க வேண்டும் என்ற ஆவலும், இதய தாகமும் ஹாஜிகளுக்கு ஏற்படுகின்றன. இது புனித ஹஜ் கடமையின் அரும்பெரும் சிறப்பு.

ஜே.எம்.சாலி

# ஹஜ் - 2010 பயணத் திட்டம்

முயிஸ் இவ்வாண்டுக்கான புனித ஹஜ் பயணச் சேவை முகவர்களுக்கு அங்கீகாரம் வழங்கியது. மொத்தம் 30 பயணங்கள் இடம் பெறும் என்று இஸ்லாமிய சமய மன்றம் பல மாதங்களுக்கு முன்பே தெரிவித்தது.

அதற்கென ஏழு தனிநபர்களும் 5 பயண முகவர்களும் நியமிக்கப்பட்டனர். 30 பயணங்கள் அடங்கிய இத்திட்டத்தில் 11 முதல் முறையாக வழங்கப்பட்டதாக முயிஸ் தெரிவித்தது. முன்னைய பயணத் திட்டங்களில் இடம் பெற்ற சில ஓட்டல்களும் தங்கும் விடுதிகளும் மறுமேம்பாட்டுக்காக இடிக்கப்பட்டதால் புதிய இட ஏற்பாடுகளை முகவர்கள் முறையாகச் செய்வார்கள் என்றும் முயிஸ் குறிப்பிட்டது.

இவ்வாண்டு ஹஜ் பயணத் திட்டத்திற்குரிய கட்டணம் 4950 வெள்ளி முதல் 5050 வெள்ளி வரை இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. விமானக் கட்டணம், அவசர மருத்துவ உதவி, காப்புறுதித் திட்டம் ஆகியவை இதில் சேராது என்றும் தெரிவிக்கப்பட்டது.

# மெண்டாக்கியின் சேவை விரிவாக்கம்

மலாய் முஸ்லிம் சுய உதவிக்குழுவான மெண்டாக்கி அதன் சேவைகளை விரிவுபடுத்தியிருக்கிறது. குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பத்தினருக்கு மட்டுமின்றி சமூகத்தின் மேலும் அதிகமான உறுப்பினர்களுக்கு உதவிகள் சென்றடையும் விதத்தில் மாற்றங்களை அது செய்துள்ளது. அதன் தொடர்பில் ஒட்டு மொத்த சேவை முகாமை மெண்டாக்கி தொடங்கி வைத்துள்ளது.

அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் பெர்சமா மெண்டாக்கி அல்லது Together with Mendaki எனப்படும் அந்த முகாமை அண்மையில் தொடங்கி வைத்தார். அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை முகாம் செயல்படும்.

நோன்பு மாதத்தில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளில் ஈகைப் பண்புக்கு எடுத்துக்காட்டாக பொதுமக்களுக்கு அன்பளிப்பும், உதவிப் பொருட்கள் அடங்கிய பைகளும் வினியோகிக்கப்பட்டன. ஹரிராயா பண உறை, வழிகாட்டிக் குறிப்பு புத்தகம், சிறார்களுக்கான ஒரு கணித நோட்டுப் புத்தகம் ஆகியவை இந்தப் பைகளில் வைக்கப் பட்டிருந்தன.

கேலாங் சிராய் சந்தைப் பகுதியில் 16.8.2010 அன்று டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் பொதுமக்களுக்கு அன்பளிப்புப் பைகளை வழங்கினார்.

# மத்திய சேம நிதியை முஸ்லிம்கள் பயன்படுத்தும் வழிமுறைகள் - முயிஸ் அறிவிப்பு




சிங்கப்பூர் முஸ்லிம்களின் மத்திய சேம நிதியிலுள்ள சேமிப்பு தொடர்பாக இதுவரை இருந்து வந்த நடைமுறையை மாற்றும் வகையில் இஸ்லாமிய சமய மன்றம் புதிய வழிமுறையை வெளியிட்டுள்ளது.

முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் இனி தமது வாழ்க்கைக்குப் பிறகு தமது விருப்பப்படி சேமநிதி சேமிப்புகளை வாழ்க்கைத் துணைவருக்கோ அல்லது வசதி குறைந்தவராக உள்ள வேறு ஒருவருக்கோ எழுதி வைக்கலாம். முயிஸ் சட்டக் குழு அதன் தொடர்பான விவரங்களை 23.9.2010 அன்று வெளியிட்டது.

இதன் மூலம் கடந்த 40 ஆண்டுகளாக நடப்பில் இருந்த முஸ்லிம்களுக்கான சேமநிதிச் சட்ட நடைமுறை மாற்றியமைக்கப்படுகிறது. எனினும், முஸ்லிம்கள் இந்த வழிமுறையைப் பின்பற்றாமல் முன்போன்றே தங்கள் சேமநிதிப் பணம் இஸ்லாமியச் சட்டப்படி பிரித்துக் கொடுக்கப்படுவதற்கு ஏதுவாக, அதற்கு வாரிசுகளை நியமனம் செய்யாமலும் இருக்கலாம். இப்படிச் செய்வதன் மூலம் அவர்களின் சேமிப்புகள் இஸ்லாமிய சட்டப்படி வாரிசுகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும்.

முயிஸ் தலைமை முஃப்தி சையது ஈஸா அல் சமைத் புதிய வழிமுறை குறித்து விளக்கமளித்தார். இவற்றில் எந்த வழியைத் தேர்ந்தெடுப்பது என்பதை அவரவர் வாரிசுகளின் நிலைக்கேற்பவும், இவர்களில் யாருக்கு அதிக தேவை இருக்கிறது என்பதைப் பொறுத்தும் இருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இஸ்லாமிய சமய மன்றம் இதற்கு முன் 1971ல் முஸ்லிம்களின் சேமநிதி நடைமுறைளை வெளியிட்டது. சேமநிதிப் பணம் முஸ்லிம்களின் சொத்தில் ஒரு பகுதி, எனவே, இஸ்லாமிய சட்டத்தின்படி அது பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும். அதனால் அது சம்பந்தமாக எவர் பெயரும் நியமனம் செய்யப்படக் கூடாது என்றும் கூறியது. இந்த நிலை தற்போது மாறியுள்ளது.

புதிய வழிமுறை பலருக்கும் பலன் தரும் என முயிஸ் நிர்வாகக் குழு உறுப்பினர் ராஜா முகம்மது தெரிவித்தார்.

# PHOTO NEWS

# படச் செய்திகள்



**Hari Raya Aidil Fitr prayers at Al-Khair mosque, 10 Sep 2010**



**Annual Ramadhan disbursement ceremony at Al-Iman mosque, 26 Aug 2010**



**Blessings-to-all day with "spirit of caring people & the environment" at Al-Mukminin mosque, 26 Sep 2010**



**Annual charity bazaar in support of Madrasah fund, 4 Sep 2010**




**Annual wakaf disbursement ceremony (Masjid Jamae Chulia) at SIH, 3 Aug 2010**




**Annual wakaf disbursement ceremony (Masjid Al-Abrar) at SIH, 3 Aug 2010**



**Study visit by Bangladeshi educationists and madrasah management team to SIH, 2-6 Aug 2010**




**Seminar series, Prof Mahmoud Mustafa Ayoub at MUIS Academy, 16 Sep 2010**

# ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின் உதவி, பராமரிப்பு நற்பணிகள்

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் (UIMA), ஆயர் ராஜா, வெஸ்ட் கோஸ்ட் அடித்தள அமைப்புகளுடன் கூட்டாக சில நிகழ்ச்சிகளை நடத்தியது.

27 ஜூன் 2010 அன்று கிளமெண்டி வெஸ்ட் இரண்டாவது தெருவிலுள்ள லிட்டில் டால்ஃபின்ஸ் பிளேஸ்கூலில் 200 குடும்பங்களுக்கு இலவச அரிசி பைகளை அள்பளிப்பாக வழங்கியது.

குடிமக்கள் ஆலோசனைக் குழு, வசிப்போர் குழு, சமூகப் பணி மற்றும் அவசரகாலக் குழு ஆகியவற்றைச் சேர்ந்த அடித்தளத் தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

வெஸ்ட் கோஸ்ட். கிளமெண்டி அக்கம் பக்கக் குடியிருப்பாளர்களுக்கு உதவுவதே இந்நிகழ்ச்சியின் நோக்கம்.

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் வெஸ்ட் கோஸ்ட் குழுத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும் வர்த்தக, தொழில், கல்வி மூத்த துணை அமைச்சருமான திரு. எஸ்.ஈஸ்வரனின் ஆலோசனையுடன் தனது புதிய குழந்தைப் பராமரிப்பு நிலையமான லிட்டில் டால்ஃபின்ஸ் பிளேஸ்கூல் வளாகத்தில் நிகழ்ச்சியை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

குழந்தைப் பாரமரிப்பு நிலையம் செப்டம்பர் 2010 முதல் இயங்கும் என்று உய்மா அறிவித்தது. 104 குழந்தைகளுக்கும், சிறார்களுக்கும் இந்த நிலையம் சேவை வழங்குகிறது. மாணவர் பராமரிப்பு சேவை வசதியும் உள்ளது. இவ்வட்டாரத்தில் வசிப்போர் மேல் விவரங்களைப் பெற உய்மாவின் பொதுச் செயலாளரும், இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளருமான ஹாஜா மைதீன் அவர்களுடன் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண் 97862574. ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம். 587 கேலாங் ரோடு #03-01 சிங்கப்பூர் 389526.

## பெருநாள் ஒன்றுகூடல்

ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கம் நோன்புப் பெருநாள் ஒன்றுகூடல் நிகழ்ச்சியையும் சிக்லாப் சவுத் சமூக மன்றத்தில் நடத்தியது.

பல சமய, சமூக மக்களும் இதில் கலந்து கொண்டனர். சுமார் 300 பேருக்கு சிண்டாவுடன் இணைந்து உதவித் தொகையை சங்கம் வழங்கியது. உதவித் தொகை பெற்ற அனைவரும் நன்றி பாராட்டினர்.





# இஸ்லாமிய நிதிச் சந்தையும் வங்கிகளும் விரிவடையும்

இஸ்லாமிய நிதித்துறை வெகுவேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. இருபது ஆண்டுகளுக்குள் இந்தத் துறை அடைந்துள்ள உலகளாவிய வளர்ச்சியும் செல்வாக்கும் நிதித்துறை வல்லுநர்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. இஸ்லாமிய வங்கிகள் இன்று சிறப்பாக இயங்கிவருகின்றன. கடந்த 16 ஆண்டுகளாக பஹ்ரேனில் நடைபெற்றுவரும் இஸ்லாமிய வங்கித் துறை மாநாடு வலுவான நிதித் தளங்களை உருவாக்கித் தந்திருக்கிறது.

சிங்கப்பூரில் ஜுன் மாதம் முதல்முறையாக நடைபெற்ற இஸ்லாமிய வங்கித்துறை மாநாடு பல அரிய சிந்தனைகளையும் செயல் திட்டங்களையும் வழங்கியிருக்கிறது. இஸ்லாமிய நிதித்துறை உலக நிதித்துறையில் மேலும் பெரிய மையமாகப் பங்காற்றவிருக்கிறது என்று மாநாட்டைத் தொடங்கி வைத்துப்பேசிய வர்த்தக, தொழில் அமைச்சர் லிம் ஹங் கியாங் கூறினார்.

அதிகரித்து வரும் விழிப்புணர்வும் நிதி நிலையங்களின் ஆற்றலுமே இதற்கு முக்கிய காரணங்கள். வழக்கமான நிதித்துறையைவிட இஸ்லாமிய வங்கித்துறை இருமடங்கு அதிக வேகத்தில் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று திரு. லிம் குறிப்பிட்டார்.

இஸ்லாமிய நிதித்துறையின் மொத்த சொத்து மதிப்பு கூடிய விரைவில் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலரைத் தாண்டிவிடும் என சில ஆய்வுகள் கணித்துள்ளன. அந்த நிதித்துறையை மேம்படுத்துவதில் மேலும் பரந்த நோக்கில் பங்காற்ற சிங்கப்பூர் தயாராக இருப்பதாக திரு. லிம் தெரிவித்தார். மத்திய கிழக்கும் ஆசியாவும் ஒன்றுக்கொன்று வளர்ச்சிக்குத் துணைபுரிந்து, பரஸ்பர நலனுக்காகப் புதிய வளர்ச்சித் துறைகளை ஆராயலாம் என்றும் பரிந்துரைத்தார். எனினும், இரு ஆண்டுகளுக்கு முன் நிதி நெருக்கடிநிலை கற்றுத்தந்த பாடங்களை இஸ்லாமிய நிதித்துறை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று வர்த்தக, தொழில் அமைச்சர் எச்சரித்தார்.

அதோடு, மூலதன வளம், சந்தை ரொக்கப் புழக்கம், இடர் நிர்வாகம் போன்ற விவகாரங்களுக்கும் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். இச்சவால்களைச் சமாளிக்க தொழில் துறையில் வலுவான ஒத்துழைப்பு நிலவவேண்டும். பஹ்ரேனில் ஆண்டுதோறும் நடைபெறும் உலக இஸ்லாமிய வங்கித் துறை மாநாட்டின் ஆசிய உச்சநிலைக் கூட்டம் இனிமேல் ஒவ்வொரு ஆண்டும் சிங்கப்பூரில் நடைபெறும். அந்தக் கூட்டம் காலப் போக்கில் இஸ்லாமிய நிதித் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆசியாவுக்கும் மத்திய கிழக்குக்கும் இடையில் இன்னும் அதிக ஈடுபாட்டைத் தூண்டும் என சிங்கப்பூர் நம்பிக்கை கொண்டுள்ளது என்று திரு லிம். குறிப்பிட்டார்.

இஸ்லாமிய நிதித் துறை-சந்தை வளர்ச்சிக்கு சிங்கப்பூர் நாணய வாரியம் (MAS) கடந்த ஆண்டு மே மாதம் புதிய விதிமுறைகளை வெளியிட்டது. உலகளாவிய ஷரியா வங்கித் தொழில் சந்தையில் சிங்கப்பூரர்கள் கணிசமாகப் பங்கேற்பதற்கு வகை செய்யும் இரண்டு நெறிமுறைகள் அவை. வங்கிகள் பரவலாக இஸ்லாமிய நிதி முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதே அதன் நோக்கம்.

இந்தோனேசியாவில் 5 ஷரியா வங்கிகள் இயங்கிவருகின்றன. மலேசியா இஸ்லாமியப் பங்குப் பத்திரம், வங்கிக் கணக்கு, நிதிச் சந்தை நடவடிக்கைகளை பரந்த அளவில் மேற்கொண்டுவருகிறது.

சென்ற ஆணடில்தான் சிங்கப்பூர் உள்ளூர் இஸ்லாமிய நிதிச் சந்தைப்பணியைத் தொடங்கியது. சிங்கப்பூரை அனைத்துலக ஷரியா வங்கி மையாமாக மேம்படுத்த இத்தகைய முயற்சிகள் உதவும் என்று நாணய வாரியத்தின் நிர்வாக இயக்குநர் அப்போது கூறினார்.

இஸ்லாமிய நிதிச் சந்தையும் வங்கிகளும் மென்மேலும் பன்மடங்கு விரிவடையும் என்று நிதித்துறை வல்லுநர்கள் கூறுகின்றனர்.

# கடையநல்லூர் முஸ்லிம்கள் வரலாறு நூல் வெளியீட்டு விழா
# எழுத்தாளர் உஸ்மான்-சிங்கைத் தமிழ்ச் செல்வத்தின் நூல்களும் வெளியீடு




சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் இருபத்தைந்துக்கு மேற்பட்ட சமூக, கலாசார, இலக்கிய அமைப்புகளுடன் இணைந்து நூல் வெளியீட்டு விழாவை *10.10.2010* அன்று சிறப்பாக நடத்தியது.

குவின்ஸ்டவுன் சமூக மன்ற அரங்கில் கடையநல்லூர் முஸ்லிம் லீகின் தலைவர் அல்ஹாஜ் நசீர் கனி தலைமையில் நடைபெற்ற விழாவில், மூத்த வர்த்தக, தொழில், கல்வித் துணை அமைச்சர் ஈஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நூல்களை வெளியிட்டார்.

கடையநல்லூர் முஸ்லிம்கள் வரலாறு நூலும், கடையநல்லூர் சமூகத்தைச் சேர்ந்த மூத்த சிங்கப்பூர் எழுத்தாளர் உஸ்மான்-சிங்கைத் தமிழ்ச் செல்வம் எழுதிய மூன்று நூல்களும் வெளியிடப்பட்டன. விழாவில் பங்கேற்பது தமக்கு மகிழ்ச்சியும் மனநிறைவும் அளிப்பதாக அமைச்சர் ஈஸ்வரன் தெரிவித்தார்.

கடையநல்லூர் முஸ்லிம்கள் வரலாறு நூலை எழுதிய ஆசிரியர்களில் இருவர் தமிழ் நாட்டிலிருந்து அழைக்கப்பட்டிருந்தனர். சிங்கப்பூர் தேசிய நூலக அதிகாரி திருவாட்டி புஷ்பலதா இந்த நூலைப் பற்றி ஆய்வுரை வழங்கினார். எழுத்தாளரும் ஓய்வு பெற்ற ஆசிரியருமான பொன் சுந்தரராசு மற்ற மூன்று நூல்கள் குறித்து ஆய்வுரை நிகழ்த்தினார்.

திரு. வி.பி.ஜோதியும், திரு. ஹரி கிருஷ்ணனும் வாழ்த்துரை வழங்கினர். கடையநல்லூர் மக்களின் பூர்வீகம், உறுதி, உழைப்பு, முன்னேற்றம், சமயப்பற்று, மொழிப்பற்று ஆகியவற்றின் பின்புலங்கள் அரிய வரலாற்றுச் சுவடுகள். அவற்றை எடுத்துரைக்கும் ஆவணப் பதிவாக வெளியிடப்பட்டிருக்கிறது, கடையநல்லூர் முஸ்லிம்களின் வரலாறு.

கடையநல்லூர் சிராஜுல் முனீர் நற்பணி மன்றம் பல தரப்பினரின் ஒத்துழைப்புடன் *924* பக்கங்களைக் கொண்ட இந்நூலைப் பதிப்பித்துள்ளது. ஒரு குறுங்கலைக்களஞ்சியம் இது என பத்திரிகைகள் பாராட்டியுள்ள இந்நூலில் பதிவு செய்யப்பட்ட தகவல்கள் படிப்போர் மனங்களில் பசுமையாகப் பதிந்துவிடுவது உறுதி.

கடையநல்லூரின் இடங்கள், காட்சிகள், நிகழ்ச்சிகள், குழுக்கள் மற்றும் அமைப்புகள் பற்றிய படங்கள், *30* ஆவணப் படிகள், நூற்றுக்கு மேற்பட்ட பிரமுகர்களின் படங்கள், துளிகள் எனும் தலைப்பில் *41* அரிய குறிப்புகள், *95* தலைப்புகளில் அமைந்த கட்டுரைகள் நூலில் இடம் பெற்றுள்ளன.

கடையநல்லூரில் வாழ்பவர்களை மட்டுமின்றி, புலம் பெயர்ந்து பல தலைமுறைகளாக வெளிநாட்டுக் குடிமக்களாகி





விட்டவர்களையும் உள்ளடக்கிய வரலாற்று நூலாக இது திகழ்கிறது.

எண்ணாயிரத்துக்கு மேற்பட்ட தலைக்கட்டுகளைக் கொண்ட ஊர். ஒரு தலைக்கட்டுக்கு 5 பேர் என்றால் ஊர் மக்கள் தொகை 40,000. ஒரு நாள் இரவில் 200 முதல் 300 திருமணங்கள் நடைபெறும் மரபு முன்னாளில் இவ்வூரில் இருந்துள்ளது. 7 வயது பெண்ணை 12 வயது ஆணுக்கு மணமுடித்துத் தரும் வழக்கமும் இங்கு இருந்திருக்கிறது.

நெசவு பெரும்பாலானவர்களின் தொழிலாக இருந்துள்ளது. பெண்ணுக்கு நெசவு தெரிந்திருந்தால் மணமுடிப்பார்கள். திருமணத் தின் போது ‘தாயிரா’ அடித்து ‘பைத்’ ஓதிச் செல்லும் பழக்கமும் இவ்வூரில் இருந்தது.

உணவுப் பழக்க வழக்கங்கள் எப்படி? வீடுகளில் காலை உணவு, தேனீர் தயாரிக்காமல் கடைகளுக்குச் சென்று வரிசை பிடித்து நின்று வாங்கி வரும் பழக்கம் உள்ளது. வெள்ளிக்கிழமைகளில் மாதர்கள் தாய் வீட்டுக்குக் குடும்ப சகிதம் சென்று இறைச்சியுடன் உணவு உண்டு மகிழ்ந்து திரும்பும் வழக்கம் உண்டு.

கடையநல்லூர் உருவாக்கிவிட்ட பலதுறை வல்லுநர்களின் எண்ணிக்கை அதிகம். 33 மருத்துவர்கள், 10 பல் மருத்துவர்கள், 7 கால்நடை மருத்துவர்கள், 11 வழக்கறிஞர்கள், 96 இமாம்கள், ஒரு நீதிபதி பல மத்திய, மாநில அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் அவர்களில் அடங்குவர்.

தமிழகத்துக்கு இஸ்லாம் வந்த வரலாறு, தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் முஸ்லிம்கள் கடையநல்லூருக்கு இடம் பெயர்ந்து வந்த வரலாறு, அங்கிருந்து பிறபகுதிகளுக்கும் நாடுகளுக்கும் குடியேறிய வரலாறு, இரு நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட அவர்களின் சமய, கல்வி, கலாசார, தொழில் மேம்பாடு, பொதுத் தொண்டு முதலானவை இந்த நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அரசியல், கலை, இலக்கியம், சமுதாய நல்லிணக்கப் பணிகளும் எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

கடையநல்லூரில் பள்ளிகள், மதரஸாக்கள், பள்ளிவாசல்கள் உருவான வரலாறு, அவற்றுக்குக் கொடை வழங்கிய முன்னோர்களின் அணி, உதவிக்கரம் நீட்டிய பிற சமூகப் பிரமுகர்களின் முகவரி முதலான தகவல்களும் இடம் பெற்றுள்ளன.

நபி மொழிகளும், இலக்கிய மேற்கோள்களும், கவிதை வரிகளும் உரிய இடங்களில் எடுத்தாளப்பட்டிருக்கின்றன.



# இளைய தலைமுறைத் தலைவர்களை உருவாக்குங்கள்

சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம் நிபுணத்துவத் திறன்மிக்க இளைய சமுதாயத் தலைவர்களை பத்து ஆண்டுகளுக்குள் உருவாக்கி, தலைமைத்துவப் பொறுப்புகளை அவர்கள் ஏற்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்.



இன்றைய நிலையில் நமது திறனாளர்கள் தங்கள் சொந்த அமைப்புகளிலும் மற்ற பல இன அமைப்புகளிலும் சேர்வதையே விரும்புகின்றனர். அவர்களின் திறன்களை சரிவரப் பயன்படுத்திக் கொண்டால், அவை சமுதாயத்திற்கு உந்துதலாக இருக்கும்.

சமூகத் தலைவர்களும் இளைய தலைமுறைத் தலைவர்களும் கலந்து கொண்ட நோன்புப் பெருநாள் ஒன்றுகூடல் உபசரிப்பு நிகழ்ச்சியில் *(17.9.2010)* முஸ்லிம் விவகார அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் இந்த சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டார்.

நமது இளையர்களுக்குச் சரியான வாய்ப்புகள் வழங்கப்பட்டால், அவர்கள் சமூகத்திலும் அதற்கப்பாலும் தலைவர்களாக மிளிரலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

அந்த இலக்கையும் வெற்றியையும் பெற நமது இளையர்களின் கல்வி வளர்ச்சிக்கு சமூகம் மிகுந்த முக்கியத்துவம் அளிக்க வேண்டும். கல்விமுறை இன்று நமக்கு பற்பல நெறிகளை, பாதைகளை வழங்குகின்றன. அவை, மாணவர்களின் வேலை, திறமை ஆகியவற்றுக்கு பொருத்தமாக அமைவதுடன், அவர்களின் நீண்டகால முயற்சிக்கு அங்கீகாரமும் அளிக்கின்றன.

நடைபெற்ற விருந்தில், நமது சமூகத்தையும், நாட்டையும் மேம்படுத்துவதில் இளையர்கள் தொடர்ந்து நாட்டம் செலுத்த வேண்டும் என்றார். அவர்களின் ஆற்றலைப் பயன்படுத்தி, படைப்பாற்றலை அரவணைத்து, அவர்களின் சிந்தனைத் திறனையும், கண்ணோட்டத்தையும் வளர்க்க சமூகம் வாய்ப்பளிக்க வேண்டும். அதிகமான மலாய் முஸ்லிம் மாணவர்கள் வெவ்வேறு கல்விமுறைகளை நாடுவதை இன்று காண்கிறோம். தங்கள் கல்விப் பயணத்தில் பலங்களைக் கண்டறிந்து திறமைகளை அவர்கள் வளர்த்துக் கொள்கிறார்கள். இன்று ஒருங்கிணைக்கப்பட்ட பல்வேறு கல்வித் திட்டங்கள் இருப்பதால் நமது மாணவர்கள் தங்கள் தேவைக்கேற்ற கல்வியைத் தேர்ந்தெடுத்து தலைமைத்துவத் திறன்களை வளர்த்துக் கொள்கிறார்கள். திறன் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன அவர்களின் ஆற்றலையும், செயல் துடிப்பையும் நாம் பயன்படுத்திக்கொள்ளத் தவறக்கூடாது. அவர்களின் விடாமுயற்சிக்கு சமூகம் பங்காற்ற வேண்டும் என்றும் அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் கூறினார்.